SA1 Paper-3

**PRIMARY 5**


**TAMIL COMPOSITION**

**Name :** ____________________ **Total Marks : 40**

**Class : Primary 5**________ **Duration : 50 mins**

**Date:**____________

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, <u>100 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் / சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை/கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| கையில் குழந்தையுடன் | வாகனத்தை நிறுத்தி |
| கவலையான முகத்துடன் | மருத்துவ செலவுக்கு |
| அழுதுகொண்டு | பரிதாபப்பட்டு |
| சந்தேகம் ஏற்பட்டது | ஏமாற்றியதால் ஆத்திரம் |



www.testpapersfree.com

SA1 தாள் - 3

1 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் , சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2, 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு

" அ " பிரிவு

வேற்றுமை

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து , அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

நீண்ட வாலுடைய எலி ஒன்று தெருவோரமாக இருந்த பொந்தில் வாழ்ந்தது. அந்த ____(1)____ சற்றுத் தொலைவில் ஒரு பூனை வசித்தது. பூனைக்கு வயதாகி விட்டதால் , எலி அதைக் கண்டு பயப்படவில்லை. ஆனால் , அங்கிருந்த சிலந்தி ஒன்று அதனிடம் , " நீ கவனமாக இருக்காவிட்டால் ஒருநாள் அந்த கிழட்டு ____(2)____ சிக்கிக்கொள்வாய் , " என்று எச்சரித்தது. ஆனால் , எலியோ சிலந்தியின் ____(3)____ உதாசீனப்படுத்தியது.

ஒருசமயம் பூனை உறங்கிக்கொண்டிருந்தது. எலி அதைத் தாண்டி ஓடியது. அப்போது எலியின் நீண்ட வால் பூனையின் ____(4)____ சிக்கிக்கொண்டது. ____(5)____ தன் கண்களையே நம்ப முடியவில்லை. அது தன் வாலை முழு பலங்கொண்டு இழுத்தது. வால் அறுந்து போனது. பூனை விழித்துக்கொண்டது. அது நடந்ததைப் புரிந்துகொண்டது. அது எலியிடம் , " எலியே ! கவலைப்படாதே ! நான் வாலைப் பொருத்தி விடுகிறேன். நீ ____(6)____ நட்பு கொள்வாயா ? " என்று சாமர்த்தியமாகப் பேசியது. அப்போது எலிக்குச் சிலந்தி சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன.

---

1. (1) பொந்தில்
(2) பொந்தை
(3) பொந்திலிருந்து
(4) பொந்தின் ( )



118

www.testpapersfree.com

2. (1) பூனையிடம்
(2) பூனையால்
(3) பூனையை
(4) பூனையிடமிருந்து ( )

3. (1) எச்சரிக்கையை
(2) எச்சரிக்கையால்
(3) எச்சரிக்கையின்
(4) எச்சரிக்கையுடன் ( )

4. (1) கால்களை
(2) கால்களோடு
(3) கால்களால்
(4) கால்களில் ( )

5. (1) எலியுடைய
(2) எலியால்
(3) எலியை
(4) எலியுடன் ( )

6. (1) என்னால்
(2) என்னை
(3) எனக்கு
(4) என்னோடு ( )



119

www.testpapersfree.com

செய்யுள் / பழமொழி

செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. கற்க கசடறக் ____________ கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(1) கல்லாதவை
(2) கற்பவை
(3) கற்பிப்பவை
(4) கற்கும்போது ( )

8. சுடினும் செம்பொன் தன்னொளி ____________ .

(1) கெடாது
(2) குன்றாது
(3) காட்டாது
(4) மறையாது ( )

9. ____________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) ஊழியன்
(2) இளையவன்
(3) உரியவன்
(4) உடையவன் ( )

10. காலத்தி னாற்செய்த நன்றி ____________
ஞாலத்தின் மாணப் பெரிது.

(1) எளிதெனினும்
(2) அரிதெனினும்
(3) பெரிதெனினும்
(4) சிறிதெனினும் ( )



120

www.testpapersfree.com

11. இளமையில் சோம்பல் முதுமையில் __________ .

(1) கவலை
(2)வறுமை
(3)ஏழ்மை
(4)தனிமை ( )

12. எண்ணும் ________ கண்ணெனத் தகும்.

(1)எழுத்தும்
(2)அறிவும்
(3)பேச்சும்
(4)எண்ணமும் ( )

தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

ஒரு சிறிய நகரத்தில் முருகன் என்ற வயதானவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு அகிலன் என்றொரு மகன் இருந்தான். அகிலனுக்குத் திருமணமாகிப் பத்து வயதில் ஒரு பையனும் இருந்தான். முருகனின் கையால் செய்யப்பட்ட அலமாரிகள் , மேசைகள் , நாற்காலிகள் ஆகியவை அந்நகரித்திலுள்ள ஏனையோர் வீடுகளிலும் காணலாம். முருகன் கடினமாக உழைத்தார். அனைவரிடமும் அன்பாகப் பழகினார். இயலாதவர்களுக்குத் தம்மால் முடிந்த அளவு கொடுத்து உதவினார். இதனால் மக்களிடையே அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் தன் மகன் அகிலனுக்குத் தச்சுத் தொழிலைக் கற்றுக்கொடுத்தார். இதன் மூலம் அகிலன் நிறைய பணம் சம்பாதித்து வந்தான். வேலையிலிருந்து ஓய்வபெற்ற சில மாதங்களில் முருகனின் கைகள் நடுங்கத் தொடங்கின. அவருடைய பார்வையும் மங்கத் தொடங்கியது. இதனால் அவர் அவ்வப்போது ஏதாவது பொருளைக் கீழே போட்டுக்கொண்டும் உடைத்துக்கொண்டும் இருந்தார். அவர் சாப்பிடும்போது கரண்டியைக் கீழே போட்டுவிடுவார். அல்லது நீர் பருகும்போது குவளையிலுள்ள



121

www.testpapersfree.com

நீரைக் கீழே கொட்டிவிடுவார். முதுமையின் காரணமாக முருகன் இவ்வாறு செய்கிறார் என்று உணர்ந்தபோதும்கூட , அகிலனும் அவனுடைய மனைவியும் அவர்மீது எரிச்சல் அடைந்தார்கள்.

ஒருநாள் அகிலன் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தான். அவனுடைய நண்பர்கள் எல்லாரும் விருந்துக்கு வந்திருந்தார்கள். அன்றும் , முருகன் சாப்பிடும்போது விலை மதிப்புள்ள பீங்கான் (**ceramic**) தட்டைக் கீழே போட்டு உடைத்துவிட்டார். அவர் தக்காளிச் சாற்றைத் தமது சட்டையில் கொட்டிவிட்டார். அவர் மோர் அருந்தும்போது , " உர்....உர் " என்று சத்தம் எழுப்பியவாறு குடித்தார். இவற்றைப் பார்த்த விருந்தினர்களில் சிலர் முகம் சுளித்தார்கள். அகிலனுக்குத் தன் தந்தைமீது கடுஞ்சினம் உண்டானது. அவனுடைய மனைவி முருகனை அவருடைய அறைக்குக் அழைத்துப் போய் அங்கு உணவு பரிமாறினாள். விருந்தும் முடிந்தது.

மறுநாள் அகிலன் சந்தையிலிருந்து ஒரு மரத்தட்டை வாங்கி வந்தான். " இனிமேல் இதில்தான் உங்களுக்குச் சாப்பாடு. அதுமட்டும் இல்லாமல் இனிமேல் சாப்பிடும் மேசையில் சாப்பிடக்கூடாது ; சமையலறையில்தான் சாப்பிடவேண்டும் , " என்று சொன்னான். முருகனுக்கு மன வருத்தம். ஆனால் , அவர் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. ஒரு மாதம் கழிந்தது. ஒருநாள் அகிலனும் அவனது மனைவியும் சாப்பிடத் தயாரானார்கள். அப்போது அவர்களுடைய மகனைக் காணவில்லை. அவன் பட்டறையில் எதையோ செய்துகொண்டிருந்தான். அகிலன் , " நீ சாப்பிட வராமல் இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறாய் ? " என்று தன் மகனை அதட்டினான். அதற்கு அவன் : " அப்பா ! நான் உங்களுக்காக ஒரு மரத்தட்டு செய்துகொண்டிருக்கிறேன். வயதான பின்னர் , நீங்கள் தாத்தாவுக்குக் கொடுத்ததுபோல நான் உங்களுக்குக் கொடுக்கவேண்டும் அல்லவா ! " என்றான். அதைக் கேட்ட அகிலன் கண் கலங்கினான். தான் செய்த தவற்றை உணர்ந்தான். இப்போதெல்லாம் முருகன் தம் குடும்பத்தினரோடு சேர்ந்து சாப்பிடுகிறார். அவர் எதையாவது உடைத்துவிட்டாலோ , அல்லது கீழே போட்டு விட்டாலோ , அகிலனும் அவனது மனைவியும் சிரித்த முகத்துடன் அதைக் ஏற்றுக் கொள்கிறார்கள்.



122

www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. முருகன் மக்களிடையே பிரபலமடையக் காரணம் என்ன ?

( 1 ) முருகன் அகிலனுக்குத் தச்சு வேலையைக் கற்றுத் தந்ததால்

( 2 ) முருகன் வேலையிலிருந்து ஓய்வு பெற்றதால்

( 3 ) முருகனிடம் காணப்பட்ட நற்பண்புகளால்

( 4 ) முருகன் தச்சு வேலை செய்து வந்ததால் ( )

14. முருகனின் உடல் வலுவும் கண் பார்வையும் எப்போது பாதிக்க ஆரம்பித்தது ?

( 1 ) முருகன் தச்சுச் தொழில் செய்தபோது

( 2 ) முருகன் பொருள்களைக் கீழே போடத் தொடங்கியபோது

( 3 ) முருகன் அகிலனுக்குத் தச்சுத் தொழிலைக் கற்றுக்கொடுத்தபோது

( 4 ) முருகன் தச்சுத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றபோது ( )

15. விருந்தில் கலந்துகொண்டவர்கள் எதைக் கண்டு முகம் சுளித்தார்கள் ?

( 1 ) முருகன் சாப்பிட்ட விதத்தைக் கண்டு .

( 2 ) அகிலன் தன் தந்தைமீது காட்டிய சினத்தைக் கண்டு

( 3 ) அகிலனின் மனைவி முருகனை நடத்திய விதத்தைக் கண்டு

( 4 ) அகிலன் அவர்களை உபசரித்த விதத்தைக் கண்டு ( )

16. அகிலன் மரத்தட்டு வாங்கி வரக் காரணமென்ன ?

( 1 ) அது உடையாது என்பதால்

( 2 ) அது விலை அதிகம் என்பதால்

( 3 ) அதில் சாப்பிட முருகன் விரும்பியதால்

( 4 ) அது பிற்காலத்தில் தனக்கும் பயன்படும் என்பதால் ( )



123

www.testpapersfree.com

17. அகிலன் யாரால் திருந்தினான் ?

( 1 ) அவனுடைய தந்தையால்

( 2 ) அவனுடைய மனைவியினால்

( 3 ) அவனுடைய மகனால்

( 4 ) அவனுடைய நண்பர்களால் ( )

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. செல்வாக்கு

(1) நட்பு

(2) மதிப்பு

(3) நம்பிக்கை

(4) நிலை ( )

19. கொட்டிவிட்டார்

(1) சிந்திவிட்டார் .

(2) தடவிவிட்டார் .

(3) போட்டுவிட்டார் .

(4) இறைத்துவிட்டார் ( )

20. காட்டிக்கொள்ளவில்லை

(1) பகிர்ந்துகொள்ளவில்லை

(2) உணர்த்தவில்லை

(3) சொல்லவில்லை

(4) வெளிப்படுத்தவில்லை ( )



124

www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

## நமது நாட்டின் பிறந்தநாளைக் கொண்டாடுவோம் : 2011

**தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான புதிர்ப்போட்டி !!**

சிங்கப்பூரையொட்டிக் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை அளியுங்கள் ! ரொக்க பரிசுகளை வெல்லுங்கள் !

**உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான கவிதை எழுதும் போட்டி !!**

மாணவர்கள் பத்து வரிகளில் சிங்கப்பூரைப் போற்றிக் கவிதை எழுதவேண்டும் ! சிறந்த ஐந்து கவிதைகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன !

**பாலர் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப்போட்டி**

சிறுவர்கள் சிங்கப்பூரில் தம்மைக் கவர்ந்த ஓரிடத்தை 1 மணி நேரத்திற்குள் வரைந்து முடிக்கவேண்டும் ! சிறந்த மூன்று படைப்புகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன !!

சிங்கப்பூரர்கள் விரும்பி உண்ணும் பரோட்டா , ரோஜாக் , சாத்தே , மீ சியாம் போன்ற உணவு வகைகள் குறைந்த விலையில் கிடைக்கும் !!

தேசிய நாள் அணிவகுப்பை பிரமாண்டமான திரையில் நேரடியாகக் கண்டு களியுங்கள் !

பிரபல உள்ளூர் கலைஞர்களை நேரில் சந்திக்க வாருங்கள் !! அவர்கள் பாடும் இனிய பாடல்களைக் கேட்டு மகிழுங்கள் !





நாள் : 9 ஆகஸ்டு 2011
நேரம் : மாலை 4 மணி முதல் இரவு 9 வரை
இடம் : சீமே சமூக மன்றம்



125

www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதன் நோக்கம் என்ன ?

(1) மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கு
(2) மாணவர்களிடைய மொழிப்பற்றை வளர்ப்பதற்கு
(3) உள்ளூர்க் கலைஞர்களுக்கு ஆதரவளிப்பதற்கு
(4) சீமே குடியிருப்பாளர்களை ஒன்று திரட்டுவதற்கு ( )

22. யார் போட்டிகளில் பங்கேற்க இயலாது ?

(1) பாலர் பள்ளி மாணவர்கள்
(2) தொடக்கக் கல்லூரி மாணவர்கள்
(3) தொடக்கப்பள்ளி மாணவர்கள்
(4) )உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ( )

23. நிகழ்ச்சிக்கு வருவோர் எதற்காகப் பணம் எடுத்து வரவேண்டும் ?

(1) போட்டியில் சேருவதற்கான கட்டணத்தைச் செலுத்த
(2) கலைஞர்களைச் சந்தித்துப் பேச
(3) உணவு வாங்கி உண்ண
(4) தேசிய அணிவகுப்பைக் காண ( )

முற்றும்



126

www.testpapersfree.com

| 24 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது. |
|---|

## " ஆ " பிரிவு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குரிய பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| 24. கடல் நீரைக் குடி நீராகச் சுத்திகரிக்கும் ________ கட்டி முடிக்கப்பட்டது. அதைப் பிரதமர் அதிகாரப் பூர்வமாகத் திறந்துவைத்தார். | 24.( ) |
| 25. கல்யாணம் நடைபெறும் தினம் நெருங்கிக்கொண்டிருந்தது. அதனால் மண்டபத்தை அலங்கரிக்கும் ________ நாங்கள் ஈடுபட்டோம். | 25.( ) |
| 26. காவலர்கள் குண்டர் கும்பலைச் சேர்ந்தவனைச் சோதித்தார்கள். அப்போது ________ கத்தி ஒன்றை அவனிடமிருந்து அவர்கள் கைப்பற்றினார்கள். | 26.( ) |
| 27. மின்னல் பளிச் பளிச்சென்று மின்னியது. மறு ________ காதைப் பிளக்கும் அளவுக்கு இடி சத்தம் கேட்டது. | 27.( ) |
| 28. ________ வழிபாடு சரியாக ஒன்பது மணிக்கு முடிவுற்றது. பின்னர் பக்தர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது. | 28.( ) |

| | |
|---|---|
| 1. கணம் | 2. இறை |
| 3. பணியில் | 4. ஆலை |
| 5. கூறிய | 6. கனம் |
| 7. ஆளை | 8. பனியில் |
| 9. இரை | 10. கூரிய |

www.testpapersfree.com

முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஓநாய் ஓர் ஆட்டைத் தின்ன அதைத் துரத்திக் கொண்டு போனது. ஆடு தன் ____(29)____ கையில் பிடித்துக்கொண்டு ஓடியது. | 29.(   ) |
| ஆடு ஒரு கோவிலுக்குள் புகுந்து அதைத் தாழிட்டுக்கொண்டது. ஓநாய் இதை சற்றும் ____(30)____ . எப்படியாவது ஆட்டைப் பிடித்துத் தின்னவேண்டும் என்று அது விரும்பியது. | 30.(   ) |
| அது கோவிலுக்கு ____(31)____ உட்கார்ந்துகொண்டது. நீண்ட நேரமாகியும் ஆடு தோன்றவில்லை. | 31.(   ) |
| சோர்வுற்ற ஓநாய் , அன்பான ____(32)____ , | 32.(   ) |
| " ஏ ஆடே ! உன்னைப் பார்த்து நான் ____(33)____ . இன்னும் கொஞ்ச நேரத்தில் , இந்தக் கோவில் பூசாரி இங்கே வந்து விடுவார். | 33.(   ) |
| அவர் உன்னைத் தெய்வத்திற்கு ____(34)____ கொடுக்கப் போகிறார். எனவே , நீ வெளியே வந்துவிடு , " என்று சொன்னது. | 34.(   ) |
| அதற்கு ஆடு , " உன் அறிவுரைக்கு ____(35)____ . நான் இங்கேயே இருப்பதுதான் எனக்குப் பாதுகாப்பு ! நான் ஓநாயின் பசியைத் தீர்ப்பதைவிடத் தெய்வத்திற்குப் பலியாவது மேல் ! " என்றது. | 35.(   ) |

| | | |
|---|---|---|
| 1. பலி | 2. எதிர்பார்க்கவில்லை | 3. வெளியே |
| 4. மொழியில் | 5. உயிரை | 6. நன்று |
| 7. ஏங்குகிறேன் | 8. குரலில் | 9. மூச்சை |
| 10. நன்றி | 11. உள்ளே | 12. இரங்குகிறேன் |



128

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

வீரய்யா என்ற முரடன் கிராமத்தில் வசித்து வந்தான். அவன் பலசாலி. மேலும் அவனுக்குத் தற்காப்புக் கலையும் தெரியும். அவனுடைய முரட்டுக் குணத்தையும் தோற்றத்தையும் கண்டு ஊர்மக்கள் அஞ்சினார்கள். அவனைத் தெருவில் கண்டால் ஒதுங்கிச் செல்வார்கள். வீரய்யா அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். அவன் சுயமாக உழைத்து வாழ விரும்பவில்லை. தன் செலவுக்குப் பணம் தேவைப்பட்டால் யாரையாவது அதட்டிப் பணத்தை வாங்கிக் கொள்வான். அதுமட்டுமல்லாமல் தன் வீட்டிற்குத் தேவைப்படுகின்ற மளிகைப் பொருள்களை இலவசமாகக் கடைக்காரர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வான். அப்போது அவர்கள் கொடுக்கவில்லை என்றால் அவர்களை அடித்து உதைப்பான். கிராமத்தில் தன் எண்ணப்படியே எல்லாம் நடந்து கொண்டிருந்ததால், வீரய்ய எந்தவிதக் கவலையுமின்றை வாழ்ந்து வரலானான். வீரய்யாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. எப்பொது வீரய்யாவின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கும் என கிராமத்து மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதே கிராமத்தில் சுந்தரம் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் வீரய்யவினால் மக்கள் படும் துன்பத்தைப் போக்க ஒரு திட்டம் தீட்டினான். அவன் கிராமத்து மக்களை இரகசியமாகச் சந்தித்துத் தன் திட்டத்தை விளக்கினான். சுந்தரம் அவர்களிடம் " நான் நாளை மாலைப் பொழுதில் என் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன். அதற்கு நீங்கள் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும்", என்றான். அதற்கு எல்லாரும் சரியென தலையாட்டினார்கள். மறுநாள் மாலை சுந்தரம் புலி வேடமிட்டுக் கொண்டு தெருவில் ஓடி வந்தான். உடனே மக்கள் திட்டமிட்டபடி, "புலி! புலி! என்று அலறினார்கள். அவர்கள் பயந்து ஓடினார்கள். அப்போது தெருவில் வந்து கொண்டிருந்த வீரய்யா இதைக் கண்டு திடுக்கிட்டான். உண்மையிலேயே புலி ஊருக்குள் வந்துவிட்டது என்று நினைத்தான். உடனே மக்கள் வீரய்யாவின் முன் திரண்டு, "வீரய்யா! நீதான் வீரனாயிற்றே! ஊருக்குள் புகுந்துவிட்டப் புலியைக் கொன்று எங்களைக் காப்பாற்று!" என்று முறையிட்டார்கள்.



www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி

வீரய்யா என்ற முரடன் கிராமத்தில் வசித்து வந்தான். அவன் பலசாலி. மேலும் அவனுக்குத் தற்காப்புக் கலையும் தெரியும். அவனுடைய முரட்டுக் குணத்தையும் தோற்றத்தையும் கண்டு ஊர்மக்கள் அஞ்சினார்கள். அவனைத் தெருவில் கண்டால் ஒதுங்கிச் செல்வார்கள். வீரய்யா அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான். அவன் சுயமாக உழைத்து வாழ விரும்பவில்லை. தன் செலவுக்குப் பணம் தேவைப்பட்டால் யாரையாவது அதட்டிப் பணத்தை வாங்கிக் கொள்வான். அதுமட்டுமல்லாமல் தன் வீட்டிற்குத் தேவைப்படுகின்ற மளிகைப் பொருள்களை இலவசமாகக் கடைக்காரர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வான். அப்போது அவர்கள் கொடுக்கவில்லை என்றால் அவர்களை அடித்து உதைப்பான். கிராமத்தில் தன் எண்ணப்படியே எல்லாம் நடந்து கொண்டிருந்ததால், வீரய்ய எந்தவிதக் கவலையுமின்றை வாழ்ந்து வரலானான். வீரய்யாவின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. எப்பொது வீரய்யாவின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கும் என கிராமத்து மக்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதே கிராமத்தில் சுந்தரம் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவன் வீரய்யவினால் மக்கள் படும் துன்பத்தைப் போக்க ஒரு திட்டம் தீட்டினான். அவன் கிராமத்து மக்களை இரகசியமாகச் சந்தித்துத் தன் திட்டத்தை விளக்கினான். சுந்தரம் அவர்களிடம் " நான் நாளை மாலைப் பொழுதில் என் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன். அதற்கு நீங்கள் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும்", என்றான். அதற்கு எல்லாரும் சரியென தலையாட்டினார்கள். மறுநாள் மாலை சுந்தரம் புலி வேடமிட்டுக் கொண்டு தெருவில் ஓடி வந்தான். உடனே மக்கள் திட்டமிட்டபடி, "புலி! புலி! என்று அலறினார்கள். அவர்கள் பயந்து ஓடினார்கள். அப்போது தெருவில் வந்து கொண்டிருந்த வீரய்யா இதைக் கண்டு திடுக்கிட்டான். உண்மையிலேயே புலி ஊருக்குள் வந்துவிட்டது என்று நினைத்தான். உடனே மக்கள் வீரய்யாவின் முன் திரண்டு, "வீரய்யா! நீதான் வீரனாயிற்றே! ஊருக்குள் புகுந்துவிட்டப் புலியைக் கொன்று எங்களைக் காப்பாற்று!" என்று முறையிட்டார்கள்.



12c

www.testpapersfree.com

புலி என்றதும் வீரய்யாவுக்கு உள்ளூர பயம்தான். என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினான். அப்போது ஓர் ஆள் அங்கு வந்து , "வீரய்யா , உன் வீட்டில் புலி பதுங்குகிறது. நீ உன் வீட்டிற்குள் போய் அந்தப் புலியைக் கொன்றுவிடு ! " என்று சொன்னார். அதைக் கேட்ட வீரய்யா தன் வீட்டை நோக்கி ஓடினான். ஆனால் , அவன் வீட்டினுள் செல்லாமல் வெளியே தயங்கி நின்றான். "வீரய்யா ! உன் வீரம் இவ்வளவுதானா ? உன் வீரத்தைக் காட்டி எங்களைத் துன்புறுத்தினாயே ! எங்கள் பொருள்களைப் பறித்துக்கொண்டாயே ! அப்பாவியான எங்களிடம் உன் வீரத்தைக் காட்டினாய். இப்போது நீ இப்புலியைக் கண்டு பயப்படுகிறாயே ! உன்னை வீரன் என்று சொல்லிக்கொள்ள நாங்கள் எல்லோரும் வெட்கப்படுகிறோம் ! " என்றார்கள். வீரய்யா அவமானத்தால் தலை குனிந்தபடி நின்றுகொண்டிருந்தான்.

அப்போது புலி வேடத்திலிருந்த சுந்தரம் திடீரென்று வீட்டிலிருந்து வெளியே வந்து வீரய்யாவின் மீது பாய்ந்தான். தன்மீது புலிதான் பாய்கிறது என்று நினைத்த வீரய்யாவோ பதறியபடி ஓட்டமெடுத்தான். தலை தெறிக்க ஓடுகின்ற வீரய்யாவைப் பார்த்து மக்கள் நகைத்தார்கள். " வீரய்யா ! ஓடாதே ! நில் ! நான் புலியல்ல. சுந்தரம்தான். உன் வீரத்தைப் பரிசோதிக்கவே இப்படி நாடகமாடினேன். நீ இப்படிப் பயந்தோடும் கோழையாக இருக்கக்கூடாது. இனிமேல் , உன்னை வீரன் என்று கூறிக்கொண்டு மக்களைத் துன்புறுத்தாதே ! " என்று கத்தினான் சுந்தரம். அதைக் கேட்டு வீரய்யா ஓடுவதை நிறுத்தினான். அவன் திரும்பி வந்து மக்கள் முன்னால் தலை குனிந்து நின்றான். தன்னை மன்னித்துவிடும்படி அவர்களிடம் வேண்டிக்கொண்டான். அன்றுமுதல் வீரய்யா யாரையும் துன்புறுத்துவதில்லை. சுந்தரத்தின் வீரத்தையும் புத்தி கூர்மையையும் கண்டு மக்கள் வியந்தார்கள்.



www.testpapersfree.com

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. கிராமத்து மக்கள் வீரய்யாவைக் கண்டு எதற்காக அஞ்சினார்கள்? (2)

37. வீரய்யா உழைக்காமலேயே எவ்வாறு தனக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொண்டான்? (4)

38. கிராமத்து எதற்கு ஒப்புக்கொண்டார்கள்? (3)

39. கிராமத்திற்குள் புலி வந்துவிட்டதை வீரய்யா எப்படி அறிந்துகொண்டான்? (3)



131

www.testpapersfree.com

40. (அ) மக்கள் வீரய்யாவிடம் என்ன செய்யச் சொன்னார்கள்? (2)
(ஆ) அதை ஏன் வீரய்யா நிறைவேற்றவில்லை? (2)

41. (அ) மக்கள் எக்காட்சியைக் கண்டு நகைத்தார்கள்? (2)
(ஆ) இக்காட்சி மக்களுக்கு எதை உணர்த்தியது? (2)



132

www.testpapersfree.com

<u>Primary - 5</u> <u>SA - 1 Paper - 3</u>

<u>நீண்ட வாலுடைய எலி........</u>

1. 3 2. 1 3. 1 4. 4 5. 2 6. 4

7. 2 8. 1 9. 4 10. 4 11. 2 12. 1

13. 3 14. 4 15. 1 16. 1 17. 23

18. 2 19. 1 20. 4

21. 1 22. 2 23. 3

24. 4 25. 3 26. 10 27. 1 28. 2

29. 5 30. 2 31. 3 32. 8 33. 12 34. 1 35. 10

36. கிராமத்து மக்கள் வீரய்யாவின் முரட்டு குணத்தையும் தோற்றத்தையும் கண்டு அஞ்சினார்கள்.

37. வீரய்யா தன் செலவுக்குப் பணம் தேவைப்பட்டால் யாரையாவது அதட்டி பணத்தை வாங்கிக் கொள்வான். தன் வீட்டுக்குத் தேவைப்படுகின்ற மளிகைப் பொருள்களை இலவசமாகக் கடைக் காரர்களிடமிருந்து பெற்றுக் கொள்வான். இவ்வாறு அவன் உழைக்காமலேயே தனக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொண்டான்.

38. கிராமத்து மக்கள் சுந்தரத்தின் திட்டத்திற்கு ஒத்துழைக்க ஒப்புக் கொண்டார்கள்.

39. கிராமத்து மக்கள் "புலி,புலி!" என்று அலறியதையும் அவர்கள் பயந்து ஓடியதையும் கண்ட போது வீரய்யா புலி வந்துவிட்டதை அறிந்து கொண்டான்.

40. மக்கள் வீரய்யாவிடம் அவனது வீட்டிற்குள் புகுந்து கொண்ட புலியைக் கொன்றுவிடும்படிச் சொன்னார்கள். புலி என்றதும் வீரய்யா உள்ளூர பயந்ததால் அவன் அதை நிறைவேற்றவில்லை.

41. வீரய்யா தன் மீது புலி பாய்கிறது என்று நினைத்ததால் தலை தெறிக்க ஓடினான். இதைக் கண்ட மக்கள் நகைத்தார்கள். இக்காட்சி வீரய்யாவிற்கு வீரம் இல்லை என்பதை மக்களுக்கு உணர்த்தியது.



www.testpapersfree.com